2. மேலவை விதி 82-ன் கீழ் விளக்க உரை.

சென்ட்ரல் ஸ்டேஷன் அருகே பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துக்கு ஏற்பட்ட விபத்து குறித்து

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர் என்ற முறையில் நான் இந்த அவைக்கு ஒரு செய்தியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்று காலை பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான வடபழனி—பாரிஸ் வழித்தடத்தில் 17 ஆம் நம்பர் பேருந்து பஸ் ஏ. 831, ரிஜிஸ்டர் நம்பர் எம்.எஸ்.எஸ். 6745 காலை 9½ மணிக்கு விபத்துக்கு உள்ளாயிற்று. வடபழனியிலிருந்து பாரிஸ் திரும்பி வரும்போது, சென்ட்ரல் ஸ்டேஷன் அருகில், டிரைவரின் கருத்துப்படி, பிரேக் பிடிக்காமல்போன காரணத்தினால், வண்டி நிற்காமல் நேராகச் சென்று, சென்ட்ரல் ஸ்டேஷன் 10 ஆம் நம்பர் பிளாட்பாரத்தில் நின்றது. போகும்போது சைக்கிளில் மீன்கூடை ஏற்றிச் சென்ற ஒருவர்மீது மோதியதால் அவர் அந்த இடத்திலேயே மரணம் அடைந்தார். மேலும் அந்த விபத்தில் தற்போதைய தகவல்படி, 14 பேர்களுக்கு காயம் ஏற்பட்டது. அவர்கள் அனைவரும் உடனடியாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. போலிசார் ஒருவர் மாண்டுவிட்டார் என்ற செய்தியை எனக்கு அளித்திருக்கிறார்கள். அந்தப் பேருந்து ஓட்டுநர் முத்தையாவை விபத்து குறித்து விசாரித்ததில், பிரேக் பிடிக்காமல் போன காரணத்தால் விபத்து நேர்ந்துவிட்டதென்று சொல்கிறார். விபத்தின் காரணம் குறித்து பிரேக் இன்ஸ்பெக்டர் ரிப்போர்ட் கேட்கப்பட்டிருக்கிறது. மேலும் விசாரணை தொடரும். விபத்திலே மாண்டுவிட்டவர்களின் குடும்பத்திற்கும், காயமடைந்தவர்களுக்கும் அரசின் சார்பில் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். விபத்து நடந்த இடத்தையும் நான் நேரிலே சென்று பார்த்தேன். மருத்துவ மனைக்கு நேரிலே சென்று, காயமடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு வந்தேன்.

3. கவன ஈர்ப்பு.

நவசக்தி பத்திரிகை அலுவலகம் சென்று பெண்கள் பலர் நவசக்தி ஊழியர்களைத் தாக்கியதன் காரணமாக அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமை குறித்து

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

 நவசக்தி பத்திரிகை அலுவலகம் சென்று பெண்கள் பலர் நவசக்தி ஊழியர்களைத் தாக்கியதன் காரணமாக அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமை குறித்து

[திரு. செ. முத்துசாமி] [1975 நவம்பர் 11

"29—10—1975 காலை 11-00—11-30 மணி அளவில் நவசக்தி பத்திரிகை அலுவலகம் சென்று பெண்கள் பலர் நவசக்தி ஊழியர்களை தாக்கியுள்ளார்கள் போலீசார் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை. இது தொடர்பாக அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையைப் பற்றி".

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, செங்கொடியின் முன்னாள் ஆசிரியரும், தற்பொழுது நவசக்தி நாளிதழின் மேலாளருமான திரு. நாஞ்சில் செல்வம், 29-10-1975 அன்று மைலாப்பூர் காவல் நிலையத்தில் புகார் ஒன்று கொடுத்தார். அப்புகாரில், தான் இரு காங்கிரசுகளும் இணைய வேண்டுமென்று ஆதரித்து, ஸ்தாபன காங்கிரசின் மகளிர் பிரிவைத் தாக்கிக் கட்டுரை எழுதியதால், 29-10-1975-ஆம் தேதி காலை 11-30 மணிக்கு தமிழ் நாடு ஸ்தாபன காங்கிரசின் மகளிர் பிரிவு அமைப்பாளர் திருமதி ரமணிபாயும் மற்றும் 50 பெண்களும் மைலாப்பூர் கச்சேரி சாலையிலுள்ள நவசக்தி அலுவலகத்தில் நுழைந்து தன்னையும் மற்றுமுள்ள ஊழியர்களையும் துடைப்பத்தால் அடித்து காரி உமிழ்ந்தார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். உடனடியாக அவ்விடத்தைச் சுற்றித் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேற்கொண்டு எவ்விதக் குழப்பமும் ஏற்படவில்லை.

மைலாப்பூர் காவல் துறை ஆய்வாளர், அப் புகாரின் பேரில் இ.பி.கோ. 147, 448, 341, 323 மற்றும் 355 பிரிவுகளின் கீழ் ஒரு வழக்கு (குற்ற எண் 5089/75) பதிவு செய்து, புலன் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டார். நவசக்தி அலுவலகத்திற்கு அருகாமையிலிருந்த நான்கு குற்றவாளிகளை கைது செய்தார். கைது செய்யப்பட்டவர்கள் அன்றே ஜாமீனின் பேரில் விடுதலை செய்யப்பட்டனர்.

புலனாய்வில் திரு. நாஞ்சில் செல்வம் மட்டும்தான் தாக்கப்பட்டார் என்றும், சம்பவம் நடைபெற்றபொழுது திரு. ரமணிபாய் நவசக்தி அலுவலகத்திற்குள் செல்லாமல் வெளியில் காத்திருந்தார் என்றும் தெரிய வந்தன. திரு. நாஞ்சில் செல்வம் கழுத்திலும், வலது கை மோதிர விரலிலும் வலி இருப்பதாகச் சொன்னார். அதன் பேரில் அவர் சிகிச்சைக்காக இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். மருத்துவ அதிகாரி, காயங்கள் சாதாரணமானவை என்று அபிப்பிராயம் தெரிவித்தார்.

திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த ஸ்தாபன காங்கிரசின் முக்கிய ஊழியரான திருமதி திலகவதி அம்மாள், சம்பவம் நடந்த அன்று இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனையில் சில காயங்களுக்காக சிகிச்சை பெற்றபின் மாலை 2 மணிக்கு மைலாப்பூர் காவல் நிலையத்தில் தன்னை திரு. நாஞ்சில் செல்வம் தாக்கியதாகப் புகார் ஒன்று கொடுத்தார். இப்புகாரின் பேரில் இ.பி.கோ.

1975 நவம்பர் 11] *[டாக்டர் மு. கருணாநிதி]*

341, 323 மற்றும் 354 பிரிவுகளின் கீழ் வழக்கு ஒன்று (குற்ற எண் 5090/75) பதிவு செய்யப்பட்டு, புலனாய்வில் இருக்கிறது. இவ் வழக்கு சம்பந்தமாக திரு. நாஞ்சில் செல்வம் கைது செய்யப்பட்டு சொந்த ஜாமீனின் பேரில் விடுதலை செய்யப்பட்டார்.

இவ்விவரங்களிலிருந்து திரு. செ. முத்துசாமி அவர்கள் விடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல் மைலாப்பூர் பகுதியில் எவ்வித பதட்ட நிலையும் இல்லை. காவல் துறையினர் தகுந்த நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, அன்றைக்கு உடனடியாக 4 பேர்களைக் கைது செய்த பின்னால், வேறு யாராவது கைது செய்யப்பட்டார்களா ? மேற்கொண்டு நடவடிக்கை என்னவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த நான்கு பேரைத் தவிர வேறு யாரும் கைது செய்யப்படவில்லை. போலீசார் புலன் விசாரணை செய்து வருகிறார்கள்.

4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு, 1975-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1975)—தொடர்ச்சி.

* THIRU G. VASANTHA PAI : Sir, yesterday I was referring to the total exemption that might be granted from the urban land tax and only the excess land being charged with the tax. I hope the Government will accept this suggestion and give complete exemption for two grounds, one ground, half-a-ground and three grounds respectively which are mentioned in the schedule and charge only the excess extent of land.

There is another important matter which I wish to bring to the notice of the Hon. the Chief Minister and that is about the several societies that have been formed for the purpose of providing accommodation for Government employees, for Housing Board employees, for Bank employees, for the L.I.C. employees and for all other persons of the same category. Sir, for example, there is one colony by name Jeevan Bhima Colony in Mylapore like this. In the suburbs like Indira Nagar and